செ. வெ. எண்: 702 30.10.2007

தமிழ்நாடு அரசு

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை மற்றும் தமிழ்நாடு சுகாதார திட்டம் ஆகிய துறைகளின் பணிகளை 30.10.2007 அன்று ஆய்வு செய்தார். இந்த ஆய்விற்கு மாவட்ட அளவில் பணிபுரியும் மாவட்ட சுகாதார துறை இணை இயக்குநர்களும் மற்றும் உயர் அரசு அலுவலர்களும் கலந்து கொண்டனர். அனைத்து அலுவலர்களையும் சிறப்பான முறையில் பணியாற்றி மக்களுக்கு சேவை புரியுமாறு அமைச்சர் அவர்களும் சுகாதார துறை செயலர் திரு.வி.கே.சுப்புராஜ்,இ.ஆ.ப. அவர்களும் கேட்டுக்கொண்டனர். கீழ்கண்ட திட்ட பணிகள் ஆய்வு செய்யப்பட்டன.

**தமிழ்நாடு சுகாதார திட்டத்தின் மூலம் அரசு மருத்துவமனைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

உலக வங்கியின்நிதி உதவி பெற்று செயல்படுத்தப்படும் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் மூலமாக 29 மாவட்டங்களில் உள்ள 270 அரசு மருத்துவமனைகளின் உள் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுகின்றன. இதன்முதல் கட்டமாக, 5 மாவட்டங்களிலுள்ள (தருமபுரி, கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை, தேனி மற்றம் கன்னியாகுமரி) 35 அரசு மருத்துவமனைகளில் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.45.818 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடியும் நிலையில் உள்ளது. மேலும் இரண்டாம் கட்டமாக 24 மாவட்டங்களில் உள்ள 232 அரசு மருத்துவமனைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.247 கோடி மதிப்பீட்டில் பணிகள் செய்யப்படவுள்ளன.

**மருத்துவ உபகரணங்கள் வழங்குதல்**

திட்டத்தின் முதற்கட்டத்தில் 38 அரசு மருத்துவ மனைகளுக்கு மருத்துவமனை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பாண்டிலேயே எஞ்சியுள்ள 232 அரசு மருத்துவமனைகளுக்கு மருத்துவ உபகரணங்கள் மற்றும் இதர பொருட்கள் வழங்கப்படும். இத்தகைய மருத்துவ உபகரணங்கள் மாவட்ட தலைமை மற்றும் இதர மருத்துவமனைகளுக்கு வழங்கப்படுவதால் மருத்துவ சிகிச்சைகளின் தரம் உயரும்.

அவசர கால ஊர்தி சேவை

15 மாவட்டங்களில் உள்ள 187 வட்டங்களில் அவசர கால ஊர்தி சேவை துவக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அவசர கால சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் குறைந்த கட்டணத்தில் விரைந்து தேவைக்கேற்ப சிறப்பு மருத்துவ மனைகளுக்கு செல்ல வசதி செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலேயே எஞ்சியுள்ள 198 வட்டங்களுக்கு அவசர கால ஊர்திகள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மலைவாழ் மக்களுக்கான சுகாதார வளர்ச்சித் திட்டம்

மலைவாழ் மக்களுக்கு நடமாடும் சுகாதார சேவைகள் வழங்கத் தேவையான ஊர்திகளை அரசு சாரா நிறுவனங்களுக்கு வழங்கி, அவைகள் சரிவர நடைபெற மருத்துவ அலுவலர்கள், ஆய்வுக்கூட நுட்பனர்கள், செவிலியர்கள், ஓட்டுநர்கள் ஆகியோரின் ஊதியம் வழங்கவும் மற்றும் மருந்துகள் வழங்கவும் தேவையான தொகையினை அந்நிறுவனங்களுக்கு வழங்க திட்டங்கள் வரையப்பட்டுள்ளன. மலைவாழ் மக்கள் வசிக்கும் 12 இடங்களில் இந்த சேவை வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர, மலைவாழ் மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்த, அவர்கள் வசிக்கும் பகுதியில் உள்ள அரசு மருத்துவ மனைகளின் சேவைகளை மேம்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிணியாளர் ஆலோசனை மையங்கள்

முதற்கட்டத்தில் 166 அரசு மருத்துவ மனைகளில் பிணியாளர்கள் ஆலோசனை மையங்கள் துவக்கப்பட்டு 24 மணிநேரமும் சேவை செய்ய மூன்று ஆலோசகர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வலுவலர்கள் கல்வியறிவில்லாத, ஏழை பிணியாளர்கள் மற்றும் கரப்பிணி தாய்மார்களுக்கு தேவையான ஆலோசனை வழங்குவர். இரண்டாவது கட்டத்திலும் இத்தகைய ஆலோசனை மையங்கள் இத்திட்டத்தில் தொடர்ந்து செயல்படும்.

மருத்துவ கழிவுகளை அப்புறப்படுத்துதல்

முதற்கட்டமாக மருத்துவக்கழிவுகளை அப்புறப்படுத்தும் திட்டம் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் முன்னோடித்திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இரண்டாம் கட்டமாக இத்திட்டம் 270 அரசு மருத்துவ மனைகளிலும் செயல்படுத்தப்பட உள்ளது.

மனிதவள மேம்பாட்டுத்திட்டம்

தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் கீழ் வரும் மருத்துவமனைகளில் பணிபுரியும் பணியாளர்களின் திறன் மேம்பட தீவிர பயிற்சிகள் வழங்க திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. மேலாண்மைத்திறன் மற்றும் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்த இப்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சிகள் பல்வேறு நிலைகளில் அளிக்கப்படுவதால் இதன் மூலம் நல்ல, தரமான மருத்துவ வசதிகள் திட்ட மருத்துவ மனைகளில் கிடைக்கும்.

மருத்துவமனைகளின் தரத்தை மேம்படுத்துதல்

பிணியாளர்களுக்கு நல்ல, தரமான மருத்துவச் சிகிச்சை அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் மருத்துவமனைகளின் மாதாந்திர சேவைகளைச் ஆய்வு செய்து, அம்மருத்துவ மனைகள் தரமான சிகிச்சை மேற்கொள்வதையொட்டி தரவாரியாக பிரிக்கப்படுகின்றன. மேலும் குறையுள்ள மருத்துவமனைகளின் திறனை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அனைத்து மருத்துவ மனைகளுக்கும் தர நிர்ணயம் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஒரே சீரான, தரமான மருத்துவ சேவை அனைத்து திட்ட மருத்துவமனைகளிலும் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தரத்தின் அடிப்படையில் அரசு மருத்தவமனைகளை மதிப்பீடு செய்யும் முறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கருப்பை வாய்புற்றுநோய்த் தடுப்பு

தமிழ்நாட்டில் கருப்பை வாய்ப் புற்றுநோய் அதிகளவில் காணப்படுகிறது. கருப்பை வாய்ப்புற்றுநோயை ஆரம்ப நிலையில் கண்டறிந்து அதற்கான சிகிச்சை அளிப்பதற்கான முன்னோடித் திட்டம் தேனி மற்றும் தஞ்சை மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. 30 வயது முதல் 60 வயது வரையிலுள்ள அனைத்து மகளிருக்கும் இச்சோதனை செய்யும் வகையில் இத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட முன்னோடித்திட்டத்தின் முடிவுகளைப் பொறுத்து இத்திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இதயநோய் மற்றும் இரத்த கொதிப்பு நோய்க்கான மருத்துவ சிகிச்சை மற்றும் தடுப்பு முறைகள்.

தமிழ்நாட்டில் சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில், இதயநோய் மற்றும் இரத்த கொதிப்பு நோய்களுக்கான மருத்துவ சிகிச்சை மற்றும் தடுப்பு முறைகள் குறித்து ஒரு

முன்னோடி திட்டம் இரண்டு ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட சுமார் 8 லட்சம் பேர்களுக்கு ஆய்வு செய்து அதிக இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் மற்றும் இதயநோய்கள் உள்ளனவா என்று கண்டறியப்படும். பிணியாளர்களிடையே அவர்கள் தங்கள் வாழ்க்கை முறையை சிறிது மாற்றிக் கொண்டால் மேற்கண்ட நோய்கள் அணுகாது என்று ஆலோசனை வழங்கப்படும். இந்நோய்களால் முன்னரே தாக்குண்டவர்களுக்கு முறையான மருத்துவச் சிகிச்சை வழங்கப்படும். இந்த முன்னோடித் திட்டத்தின் முடிவுகளைப் பொறுத்து இச்சேவையை தமிழ்நாடு முழுவதும் விஸ்தரிக்க திட்டங்கள் தயாரிக்கப்படும்.

## மருத்துவமனை மேலாண்மைக் குறித்த தகவல்திட்டம்

மருத்துவமனையில் வழங்கப்படும் சிகிச்சை முறை மேம்பாடு குறித்து மருத்துவமனை, மாவட்டம் மற்றும் மாநில அளவில் தகவல் அறிந்து அதன் அடிப்படையில் சேவைகளை மேம்படுத்த ஒவ்வொரு திட்ட மருத்துவமனையும் கணினியால் இணைக்கப்படும். உள்நோயாளிகள் மற்றும் புறநோயாளிகளுக்கு அளிக்கும் சிகிச்சை குறித்த விவரங்கள் கணினியில் பதிவு செய்யப்படும். முதற்கட்டமாக 5 மாவட்டகளில் உள்ள 38 மருத்துவமனைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. பின்னர் தமிழ்நாடு முழுவதற்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படும்.

## சுகாதார மேம்பாட்டுப் பணிகள்

மக்களுக்கு சென்றடையும் வகையில் இரத்தக்கொதிப்பு, சர்க்கரை நோய் மற்றும் இதயநோய்கள் வராமல் தடுக்க வாழ்க்கை முறையை மாற்றுவதற்காக பல்வேறு ஆலோசனைகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பிரசாரங்கள் மூலம் குறைந்த அளவு கொழுப்பு சத்து மற்றும் உப்பு உள்ள சமச்சீரான உணவு உட்கொள்ளுதல், உடற்பயிற்சி செய்வதன் முக்கியத்துவம், உடல் எடையைக் குறைத்தல், புகைப்பிடிப்பதை நிறுத்துதல் போன்ற நல்ல பழக்கங்களை கடைபிடித்தல் ஆகியவை குறித்து அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. மேலும் தொலைக்காட்சி, வானொலி மற்றும் செய்தித்தாள்கள் போன்ற ஊடகங்கள் வழியாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இத்தகைய சுகாதாரச் செய்திகளை போஸ்டர்கள், ஸ்டிக்கர்கள், நோட்டீஸ், விளம்பரப்பலகைகள் போன்றவை வாயிலாக பொதுமக்களுக்கு தெரிவிக்க திட்டம் தீட்டப்பட்டுள்ளது. சுகாதார குழு, நடைப் பயிற்சியாளரகள் குழு, மிதிவண்டி பயன்படுத்துவோர் குழு போன்ற அமைப்புகள் ஏற்படுத்த ஊக்கம் அளிக்கப்படும். இதன் மூலம் இந்நோய்களுக்கான தடுப்பு முறைகள்

பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படும். பள்ளி வளாகங்கள் மற்றும் பள்ளி சார்ந்த இடங்களில் இத்தகைய சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## தமிழ்நாடு நோயாளர் நல நிதி

- தமிழ்நாடு நோயாளர் நலநிதியிலிருந்து இருதய அறுவைச் சிகிச்சை , புற்றுநோய், மூளை நரம்பு, அறுவைச் சிகிச்சை முதுகுத் தண்டுவட அறுவைச் சிகிச்சை இடுப்பு மூட்டு அறுவைச் சிகிச்சை ஆகிய நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தமிழ்நாடு நோயாளர் நல நிதியிலிருந்து சிகிச்சைக்காகத் தற்போது வழங்கப்படும் தொகை ரூ. 5,000 லிருந்து நடப்பு நிதியாண்டில் ரூ. 25,000 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

- சென்னை குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் மதுரை இராசாசி அரசு மருத்துவமனை ஆகிய இரண்டு இடங்களில் குழந்தைகளுக்கான இருதய நோய் அறுவைச் சிகிச்சை நடைபெற்று வருகிறது. அறுவைச் சிகிச்சைக்காக காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்கு விரைவில் சிகிச்சை கிடைத்திட , தனியார் மருத்துவமனைகளுடன் ஒப்பந்தம் செய்து, தமிழ்நாடு நோயாளர் நல நிதியிலிருந்து சிகிச்சைக்குண்டான தொகையை அந்தந்த தனியார் மருத்துவமனைக்கு வழங்கும் ஒரு திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின்மூலம் தமிழகத்தில் இருதய நோய் அறுவைச் சிகிச்சைக்காக காத்திருப்போர் பட்டியலில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை இதனால் குறைக்கப்படும்.

## மன நல திட்டம்

- மன நல நோயாளிகளுக்கென 8 மாவட்டங்களில் தற்போது மாவட்ட மன நலத் திட்டம் செயல்படுவது போல, நடப்பு நிதியாண்டில் சென்னை, திருவள்ளூர், காஞ்சீபுரம், கடலூர், பெரம்பலூர், திருவாரூர், விருதுநகர், நாமக்கல் ஆகிய 8 மாவட்டங்களுக்கும் ரூ. 3 கோடி செலவில் இத்திட்டம் விரிவு படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசு மருத்துவமனைகளின் கட்டிட பராமரிப்பு

- அரசு மருத்துவமனைகளுக்கு கட்டிட மற்றும் மின் பணிகளுக்கு பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புக்கான ரூ.19.72 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசு மருத்துவமனைகளுக்கு மருந்துகள் வழங்குதல்

- அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கு தமிழ்நாடு மருத்துவ சேவைக்கழகம் மூலமாக மருந்துகள் வழங்குவதற்காக தற்போது ரூ.170 கோடி ஒதுக்கியுள்ளது. இது கடந்த ஆண்டைவிட ரூ.33.25 கோடி அதிகமாகும்.

முன் நிர்ணயம் மற்றும் பிறப்பிற்கு முன் கருவின் தன்மை அறியும் தொழில்நுட்ப சட்டம்

- கர்ப்ப காலத்தில் சிசுவை ஆணா பெண்ணா என்று கண்டறிந்து பெண் சிசுவாக இருந்தால் கருவிலேயே அழிக்கும் கொடிய வழக்கத்தை தடுத்திட தவறு இழைக்கும் ஸ்கேன் மையங்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுத்திட மாவட்ட இணை இயக்குநர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இச்சட்டம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட ரூ.50 இலட்சம் மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை இச்சட்டத்தின் கீழ் 3402 ஸ்கேன் மையங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இம் மையங்கள் சட்டத்திற்கு உட்பட்டு நடைபெறுகின்றனவா என்று தீவிர ஆய்வு செய்த பிறகே பதிவுகள் புதுப்பிக்கப்படுகின்றது.

அரசு மருத்துவமனைகளின் காலியிடங்கள் நிரப்புதல்

- பல்வேறு அரசு மருத்துவ மனைகளில் மருத்துவ மனைப் பணியாளர், துப்புரவுப் பணியாளர், சமையலர், சலவையாளர், ஆய்வக நுட்புனர் நிலை 2, மருந்தாளுநர், மின் பணியாளர்,

செவித்திறனாய்வாளர் உள்ளிட்ட 282 பணியிடங்கள் சம்பள விகித அடிப்படையில் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட்டுள்ளன.

- ஏற்கனவே தொகுப்பூதிய முறையில் பணியாற்றிய 180 மருந்தாளுநர்களும், 22 ஆய்வக நுட்புனர்களும், 19 இயன்முறை சிகிச்சையாளர்களும் (தரம் 2) காலமுறை ஊதியத்தில் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

- உதவி பல் மருத்துவர் நியமனம் தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் 54 உதவி பல் மருத்துவர்கள் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

- தமிழ்நாடு அரசு மருத்துவத்துறையின் கீழ் இயங்கி வரும் அரசு மருத்துவமனைகளில் உள் நோயாளி, மற்றும் வெளி நோயாளிகளுக்கு அளிக்கப்படும் செவிலியர் பராமரிப்பை மேம்படுத்தும் வகையில் ஒப்பந்த அடிப்படையில் 2,400 செவிலியர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட 3,115 செவிலியர்கள் காலமுறை சம்பளத்தில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் 1000 செவிலியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

<u>விபத்து மற்றும் அவசர சிகிச்சை வலுப்படுத்துதல் (ம) மேம்படுத்துதல்</u>

- தேசிய நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள அரசு மருத்துவமனை, தாம்பரம், பத்மனாபபுரம், தென்காசி, கடலூர், நாமக்கல் , வாலாஜா மற்றும் மேலூர் ஆகிய இடங்களில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப்பிரிவு ரூ.10.50 கோடி செலவில் வலுப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் மேற்கண்ட மருத்துவ மனைகளுக்கு விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான அவசர கால ஊர்தி ஒரு மருத்துவ மனைக்கு 2 என்ற விகிதத்தில் 14 ஊர்திகள் ரூ.1.36 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

## ஒருங்கிணைந்த அவசர மகப்பேறு சிகிச்சை மற்றும் மைய சிசு கவனிப்பு மையங்களை வலுப்படுத்துதல்

- 24 மணி நேர மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல அவசர சிகிச்சை மருத்துவ மனைகள் பேறு காலத்தில் ஏற்படும் சிசு மரணம் மற்றும் கர்ப்பிணி தாய்மார்கள் மரணம் ஆகியவற்றின் விகிதத்தை மிகவும் குறைத்து தமிழ்நாட்டை முதல் மாநிலமாக ஆக்குவதற்கு தாய் சேய் நலத்திட்டத்தில் 24 மணி நேரமும் செயல்படும் 82 அவசர கால தாய்சேய் நல மையங்கள் இத்திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்டுள்ளன. கர்ப்பிணி தாய்மார்கள் சிக்கலான மகப்பேறுக்கு அலைய வேண்டிய சூழ்நிலை இதனால் தவிர்க்கப்படுகிறது. மேலும் இத்தகைய மையங்களில் –

  குழந்தை மருத்துவர், மகப்பேறு மருத்துவர், மயக்க மருந்து நிபுணர்கள் மற்றும் செவிலியர்களும் பணி புரிகின்றனர்.

  24 மணி நேரமும் இயங்கும் அறுவை அரங்கம், இரத்த வங்கி, ஸ்கேன் வசதி, இரத்த பரிசோதனை மையங்கள் செயல்படுகின்றன.

  இந்த மையங்களுக்கு ரூ.17.5 கோடி அளவில் மருத்துவ மனை கருவிகள் மற்றும் தளவாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

  400 செவிலியர்கள் மற்றும் 400 சிறப்பு மருத்துவர்கள் கூடுதலாக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

  24 மணி நேரமும் இயங்கும் அவசர கால ஊர்திகளும் வழங்கப்பட்டுள்ளன.

**வெளியீடு, இயக்குநர்,**
**செய்தி, மக்கள் தொடர்புத் துறை,**
**தலைமைச் செயலகம், சென்னை-9.**